**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி</u>**

**அசல் வழக்கு எண்.** 132/2022

**வாக்குமூலம்.வா.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சித்ரா | தொழில் | |
| க/பெ. | செல்லத்துரை | வயது | 51 / 2025 |
| கிராமம் | | | |
| தாலுகா | | | |

1873–ம் வருடத்து 10–ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 12.09.2025ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**<u>1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எனது மகன் தற்போது சிங்கப்பூரில் வசிக்கிறார். எனது மகன் சிங்கப்பூரில் 7 ஆண்டுகளாக இருக்கிறார். எனது மகனுக்கு தற்போது 30 வயது ஆகிறது. நிரூபணவாக்குமூலத்தில் எனது மகனின் வயது 26 என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு திருமணம் ஆனதற்கான புகைப்படம் திருமண பத்திரிக்கை தாக்கல் செய்து இருக்கிறேனா என்றால் இல்லை. நான் 1998ல் இருந்து 2009 வரை சென்னை பட்டாபிராமண் தெருவில் தான் வசித்து வந்தேன் என்றால் சரிதான். 2010 முதல் 2025 வரை சிவகங்கை மாவட்டம் கோட்டையூரில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். நான் கோட்டையூரில் 2010ல் வசித்து வந்த வீடு மூக்குடியை சேர்ந்த வெள்ளைச்சாமி என்பவருக்கு சொந்தமான வீடு என்றால் இல்லை. அது எனக்கு சொந்தமான வீடு ஆகும். நான் சொல்வது தவறு என்றாலும் வெள்ளைச்சாமிக்கு சொந்தமான வீட்டில் நான் குடியிருந்து வந்தேன் என்றால் சரியல்ல.

2. நான் அந்த வீட்டை வாங்குவதற்கு என்னுடைய 7 பவுன் நகையை கொடுத்து இருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் 7 பவுன் நகையை கொடுத்து வீட்டை வாங்கினேன் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வெள்ளைச்சாமி தற்போது உயிருடன் இல்லை தற்போது இறந்துவிட்டார். வெள்ளைச்சாமி இறந்தபிறகு வெள்ளைச்சாமியின் மனைவி மற்றும் ஊர் பெரியவர்கள் என்னிடம் சண்டைப்போட்டு அந்த வீட்டை காலி செய்ய சொன்னார்கள் என்றால் சரியல்ல. அந்த வீட்டை நான் 10 லட்சம் வாங்கிக்கொண்டு தான் காலி செய்தேன் என்றால் சரியல்ல. அதன் பிறகு நான் அந்த வீட்டிற்கு அருகில் மற்றொரு வீடு வாங்கிக்கொண்டு சென்று விட்டேன் என்றால் சரிதான். எனது மகன் பட்டப்படிப்பு படித்துள்ளார். 2ம் பிரதிவாதி

செல்லத்துரையின் மனைவி பெயர் சாந்தி என்றால் சரிதான். 3,4 பிரதிவாதிகள் செல்லத்துரையின் மகன், மகள் என்றால் சரிதான். வழக்கு சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாகமாக 31.01.2013ஆம் தேதி பாகப்பிரிவினை பத்திரப்படி ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். தாவா சொத்து 1ம் பிரதிவாதி கருப்பையாவின் தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. பூர்வீக சொத்து தாவா சொத்து கருப்பையாவும் அவரது சகோதரர்களும் பிரித்துக்கொண்ட சொத்து என்றால் சரிதான்.

**வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**